நல்லூர் இளை நூலகம்
யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் ஆறு　　　　விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 109 பிரசோற்பத்தி பங்குனி 02 ( 15 . 03 . 1992 ) ஞாயிறு


## நெடுந்தீவு படகுப்பணத்தில் செஞ்சிலுவை வாகனங்கள்

நெடுந்தீவு படகுச் சேவைக்காக இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஒதுக்கிய 46 லட்சம் ரூபா பணம் தற்போது செஞ்சிலுவைச்சங்க வாகனங்கள் வாங்கப் பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பணத்தில் வாங்கப்பட்ட வாகனங்கள் தெற்கில் பயன்படுத்தப்படுவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. தற்போதைய நிலையில் இந்தப் பணத்தை வடக்கே அனுப்பப்பட்டிருந்தால் அகதிகளின் தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன. 06

# எதிர்க்கட்சியினரின் பாதயாத்திரை நாளை திட்டமிட்டபடி நடக்குமா?

## அரசு தடுக்க முயற்சிக்கிறது

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் மற்ற எதிர்க்கட்சியினரும் நாளை திங்கட்கிழமை நடத்தவுள்ள கதிர்காமத்துக்கான பாதயாத்திரையை அரசு தடுக்க முயற்சி எடுப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் திட்டமிட்டபடி நாளை கதிர்காமத்துக்கு பாதயாத்திரை புறப்படும் எனவும் மிக அமைதியான முறையில் கோஷங்கள் இன்றி யாத்திரை செல்லும் எனவும் சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இப் பாதயாத்திரையின் போது கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி நவசம சமாஜக் கட்சி ஆதரவாளர் உட்பட சுமார் பதினையாயிரம் பேர் கலந்து கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதயாத்திரைக்காக அமைக்கப்பட்ட பதாதையைகடந்த 6 ஆம் திகதி இரவு வாகனத்தில் வந்தசிலர் அடித்து நொருக்கியதும் குறிப்பிடத்தக்கது.

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நடாத்தும் முதலாவது பாதயாத்திரை இதுவென பி பி, ஸி தெரிவித்தது.

## 1989 தேர்தல் தினத்தன்று 300பேர் நாட்டில் கொலை

1989 ஆம் ஆண்டு தேர்தல் தினத்தன்று 48 மணி நேரத்தில் மட்டும் 300 பேர் வரை நாட்டில் கொலைப்பட்டதாக சிங்கள பி பி ஸி தெரிவித்தது

ஜே வி பி நடவடிக்கைகளின் போது இத்தேர்தல் நடைபெற்றதால் இக்கொலைகள் இடம் பெற்றதாகவும் பிபிஸி குறிப்பிட்டது

அன்றைய தினம் 13 இடங்களில் தேர்தல் வன்முறைகள் நிகழ்ந்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் ராவய பத்திரிகைக்கு தெரிவித்ததாகவும் பி பி.ஸி மேலும்கூறியது

## திருவடிநிலையிலிருந்து பீரங்கித் தாக்குதல்

காரைநகர்க் கரையோரமாகவும் திருவடி நிலைக் கடற்பிரதேசத்திலும் பெருந்தொகையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்,

இங்கு இதுவரை நிறுத்தப்படாத அளவுக்குப் பீரங்கிப் படகுகளும் நிறுத்தப்பட்டுள்ளன

நேற்று (14. 3. 92) அதிகாலை முதல் 9 மணிவரை இப்படகுகளிலிருந்து பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன,

பொன்னாலை, மூளாய், சுழிபுரம் பகுதிகளை நோக்கி ஏவப்பட்ட பீரங்கிக்குண்டுகள் மேற்படி கிராமங்களிலுள்ள வெளிகளில் விழுந்து வெடித்தன.

இடையிடையே துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன.

மக்கள் பீதியடைந்து இடம்பெயர்ந்து பண்ணாகம், தொல்புரம் பகுதிகளை நோக்கிச் சென்றுகொண்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. 18

## புலிகளுக்கு பணம் கடத்தல் வர்த்தகருக்கு பிணை

விடுதலைப்புலிகளுக்குப்பணம் கடத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வல்வெட்டித்துறையைச்சேர்ந்த வர்த்தகர் பாலச்சந்திரனை கொழும்பு பிரதம நீதவான் பிணையில் செல்ல அனுமதித்தார்.

இவர் மீது வழக்குத்தொடர போதிய ஆதாரம் இல்லை என சட்டமா அதிபர் கூறியதையடுத்து நீதவான் 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையில் செல்ல அனுமதித்தார்,

## விமானத்தாக்குதலால் சேதமான நகர கடைகள் திருத்தியமைக்கப்படுகின்றன

1990 ஆம் ஆண்டு யாழ் பெரியகடைப் பகுதியில் விமானக்குண்டு வீச்சினால் தரைமட்டமாக்கப்பட்ட கடைகள் மீண்டும் யாழ் மாநகர சபையால் திருத்தியமைக்கப்படுகின்றன,

இப்பகுதியில் சுமார் 30 க்கு மேற்பட்ட கடைகள் யாழ் மாநகரசபையினால் திருத்தப்பட்டு வருகின்றன. 07

## ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா

தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிடும் களத்தில் நின்று வேங்கைகள் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்,

## காயமடைந்தவர் மரணமானார்

தாரும் சொலிக்கனமும் ஒன்றாக கலந்து ஒயில் செய்ய முற்பட்டபோது தார்ப்பீப்பா வெடித்து உடல் முழுவதும் தீக் காயங்களுக்குளளாகி யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இரு இளைஞர்களில் ஒருவர் நேற்று முன் தினம் மரணமானார்.

பண்டத்தரிப்பு அந்தோனியார் கோவில் ஒழுங்கையைச் சேர்ந்த கே, தேவராஜா (18) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (07)

## திருகோணமலையில் இராணுவ நடவடிக்கை

திருகோணமலை மாவட்டத்தில் விரைவில் பாரிய இராணுவ நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பின்னர் திருகோணமலையில் உள்ள பத்தாயிரம் அகதிகளை மீளக் குடியமர்த்தப் போவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

## சட்டசபையில் திருநாவுக்கரசு தமிழீழம் அமைவதை எம். ஜி. ஆர். ஆதரித்தார்

இலங்கையில் தமிழ் ஈழம் அமைய தமிழக அரசு உதவ வேண்டும், இக் கொள்கையையே முன்னாள் முதல்வர் எம்.ஜி ஆர்.ஆதரித்துவந்தார்

இவ்வாறு அண்ணா புரட்சித்தலைவர் தமிழக முன்னேற்றக்கழக சட்டமன்ற உறுப்பினர் எஸ், திருநாவுக்கரசு தமிழக சட்டமன்றத்தில் நடைபெற்ற பட்ஜட் உரையின்போது நேற்றுக் குறிப்பிட்டார்

இக்கட்டத்தில் அவைத் தலைவர் நெடுஞ்செழியனும் மற்றும் அமைச்சர்களும் இதனை மறுத்துப் பேசினர்

—06 ஆம் பக்கம் பார்க்க

## க. பொ. த (உ, த) பரீட்சை அனுமதி அட்டைகள் யாழ்ப்பாணம் வந்தன

அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் க. பொ. த உயர்தரப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டுள்ளன

இந்த அனுமதி அட்டைகள் இன்னும் சில தினங்களில் பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். 06

## போரை முடிப்பதற்கு கண்காணிப்புக் குழு!

சோமாலியாவில் கடந்த 3 மாதங்களாக நடந்து வரும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவது பற்றி ஆராய 29 பேர் கொண்ட கண்காணிப்புக் குழுவொன்றை அங்கு அனுப்பி வைக்குமாறு ஐ நா. செயலாளர் பூட்டார்ஸ்காலி பாதுகாப்புச் சபையினரைக் கேட்டுள்ளார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புச் செய்வதற்கு எத்தனை பேர் தேவை என்பதையும் அதனை எவ்வாறு செய்யலாம் என்பதுபற்றியும் இக்குழு ஆராய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

## இது ஐ. தே. க அரசல்ல பிரேமதாஸ அரசே - லலித்

இது ஐ தே.க அரசு இல்லை பிரேமதாஸ அரசு இன்று நாம் அரசுடன் போராடவில்லை பிரேமதாஸவுடனேயேபோராடுகிறோம்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர்லலித் அத்துலத் முதலி புத்தளத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்

மக்கள் இன்று உணரத் தொடங்கிவிட்டனர் சகல கட்சி மக்களும் எமக்கு ஆதரவு நல்கி வருகின்றனர் எனவும் சொன்னனர்.

## 10தமிழர் கைது

மட்டக்களப்பு பகுதியில் கடந்த நான்கு தினங்களில் இருபெண்கள் உட்படபத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் படையினரால் முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டனர்,

மண்டூர், சித்தாண்டி, காளவாய் ஆகிய பகுதிகளிலிருந்தே இவர்கள் பிடிக்கப்பட்டனர்,

★ வடபகுதி ஓய்வூதியர்களின் கஷ்டங்கள் கொழும்பு அதிகாரிகளுக்கு நேரில் எடுத்துரைப்பு

# சிங்களச் சட்டத்தினால் பாதிப்புற்று ஓய்வு பெற்றோருக்கு

# பாக்கிப்படி உயர்வுகளை வழங்க கோரிக்கை

1956 ஆம் ஆண்டுகொண்டு வரப்பட்ட தனிச்சிங்களச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கும், 1980 ஆம் ஆண்டு ஜூலையில் நடந்த வேலைநிறுத்தங் காரணமாக வேலை இழந்து பின்னர் முன் பாக்கிச் சம்பளப் படி உயர்வுகள் வழங்கி ஓய்வூதியம் கணிக்கப்படுவது போன்று பாக்கிப்படி உயர்வுகள் வழங்கி ஓய்வூதியம் மறுசீரமைக்கப்படல் வேண்டு மென வட மாநில ஓய்வூதியர்கள் சங்கங்களின் சமமேளனம் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சைக் கோரியுள்ளது.

மேற்படி சம்மேளனச் செயலாளர் பி. எஸ்: திருச்செல்வம் தலைமையில் கொழும்பு சென்ற தூதுக்குழு அண்மையில் பொது நிர்வாக மாகாண அமைச்சின் செயலாளர் எஸ் ஜூனைதீ ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் டபிள்யூ பியசேனா ஆகியோரைச் சந்தித்து இது குறித்து நேரில் எடுத்துரைத்தது

சம்மேளனத்தின் தூதுக் கோஷ்டியில் ஓய்வூதியர்களான என். கதிர்காமநாதன், எஸ். ஜெயரத்தினம் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்

○ 1988 ஆம் ஆண்டு அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 260 ரூபா விஷேடபடி ஓய்வூதியர்களுக்கு விரைவில் கிடைக்க ஆவன செய்யப்படல் வேண்டும்.

○ தனிச் சிங்கள மொழிச் சட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் பென்ஷனுக்கும் அரசின் மொழிக் கொள்கை மாற்றமடைந்த பின்னர் ஓய்வு பெற்றோருக்கு வழங்கப்படும் பென்ஷனுக்குமிடையில் உள்ள வேறுபாடுகள் நீக்கப்படல் வேண்டும்

○ உள்ளூராட்சிச் சேவையிலிருந்து ஓய்வுபெற்றோருக்கு அவர்கள் ஓய்வுபெற்றதன் பின்னரும் விதவைகள், அனாதைகள் பென்ஷனுக்கு எனக் குறிப்பிட்ட ஒரு தொகை கழிக்கப்படுகிறது. ஆனால் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றோருக்கு இதில் விலக்களிக்கப்படுகிறது. இந்த முரண்பாடு நீக்கப்படல் வேண்டும்.

போன்ற கோரிக்கைகள் உள்ளிட்ட வடமாநிலத்திலுள்ள அரச ஓய்வூதியம் பெறுவோர் எதிர்நோக்கும் பல்வேறு கஷ்டங்கள், புறக்கணிப்புக்கள் குறித்தும் சம்மேளனம் இச் சந்திப்பில் எடுத்துரைத்தது.

## 10 வருட சேவை புரிந்த

### தற்காலிக ஊழியருக்கும் ஓய்வூதியம்

10 வருடங்களுக்கு மேலாக அரசாங்க பாடசாலைகளிலும், கல்வி அலுவலகங்களிலும் கடமையாற்றி 60 வயதையடைந்து இளைப்பாறியுள்ள ஊழியர்களில் தற்காலிக ஓய்வூதிய உரித்தற்ற, சேவையைப் பூர்த்திசெய்துள்ள ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது:

இது குறித்த விபரங்கள் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் மாகாண கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது, (15)

# இவ் வருட நிதி ஒதுக்கீடு

## எம். பி. க்களுக்கு இதுவரை இல்லை

பன்முக வரவு செலவுத்திட்டத்தின் கீழ் தொகுதி அபிவிருத்தி வேலைகளுக்காக வருடாவருடம் எம். பி க்களுக்கு ஒதுக்கப்படும் நிதி இந்த வருடம் இன்னமும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆளும் கட்சி, எதிரணி உட்பட அனைத்து எம் பி.களுக்கும் வருடா வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் 25 இலட்சம் ரூபா வழங்கப்படுவது வழக்கம்!

ஆனால் 3 மாதங்கள் ஆகிவிட்ட போதிலும் இவ் வருடத்திற்கான பணம் இதுவரை ஒதுக்கப்படவில்லை. ஒதுக்கப்படாததற்கான காரணமும் கூறப்படவில்லை

எதிரணித் தூதுக்குழுவொன்று இதுகுறித்து ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

## இறக்குமதியாகும் பொருள்களின் விலை

# அதிகரிக்கலாமென அச்சம்

இறக்குமதியாகும் பொருள்களின் விலை இலங்கையில் விரைவில் அதிகரிப்பதற்கான நிலை ஒன்று உருவாகி வருவதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மத்திய வங்கி கடந்த ஜனவரி முதல் நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டை தளர்த்தியதன் விளைவாக டொலரை வாங்குவதற்கும் விற்பதற்குமிடையிலான இடைவெளி ஜனவரியில் 10 சத வீதத்திலிருந்து இந்த வாரம் 433 சத வீதமாக உயர்ந்துள்ளது.

இதனால் மத்திய வங்கி டொலரை மிதக்க விடும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், டொலர் சுதந்திரமாக நெகிழ்க்கப்படுமானால் இறக்குமதியாகும் நுகர் பொருள்களின் விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாததாக இருக்குமெனவும் பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# ராஜீவ் கொலை சாட்சியங்களை

# இலங்கையில் பதிவுசெய்ய அனுமதி!

ராஜீவ்காந்தி கொலை தொடர்பான சாட்சியங்களை இங்கு வைத்துப் பதிவு செய்வதற்கான அனுமதியை இலங்கை நீதிமன்றமொன்றுக்கு இக் கொலை பற்றிய விசாரணையை மேற்கொள்ளவென நிறுவப்பட்டுள்ள இந்திய விசேட நீதிமன்றம் வழங்கியுள்ளது,

இதற்கான அனுமதியை வழங்கும் 'லெட்டர் றொக்கறறி' என சட்ட பரிபாஷையில் குறிப்பிடப்படும் கடிதம் இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவராலயத்தின் மூலம் கொழும்பிலுள்ள சட்டமா அதிபரின் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இக் கடிதம் குறித்து சட்டமா அதிபர் அலுவலகம் தற்பொழுது ஆராய்ந்து வருகின்றது ராஜீவ் கொலை தொடர்பான சாட்சியங்களை இங்கு பதிவு செய்வதற்கென ஒரு நீதிமன்றத்தை சட்டமா அதிபர் விரைவில் அறிவிப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## வரதட்சணைக் கொடுமையால் இந்தியாவில் 4 ஆண்டுகளில் 15,891 பெண்கள் கொலை!

இந்தியாவில் வரதட்சணைக் கொடுமைக்கு கடந்த 4 ஆண்டுகளில் பலியான புதுமணப் பெண்களின் எண்ணிக்கை இதே காலத்தில் பஞ்சாப் தீவிரவாத கிளர்ச்சியில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையையும் மிஞ்சிவிட்டது,

1988 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை 15 891 பெண்கள் திருமணமான புதிதில் அங்கு கொல்லப்பட்டதாக இந்தியப் பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்ட புள்ளி விவரமொன்று தெரிவிக்கின்றது,

ஆனால் இந்தக்காலத்தில் பஞ்சாப் சீக்கியர் கிளர்ச்சியால் கொல்லப்பட்டவர்கள் 14 500 பேர் ஆவர்.

போதுமான அளவு பணம், நகை இதர பாவனைப் பொருள்கள் ஆகியவற்றைக் கொண்டுவரவில்லை எனக் கணவன் வீட்டாரால் குற்றம் சாட்டப்பட்ட இப்பெண்கள் கொலை மற்றும் கொடுமை தாங்காது தற்கொலை ஆகியவற்றுக்குப் பலியாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் 1961 ஆம் ஆண்டிலேயே வரதட்சணை ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டுவிட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது,

# 83 எம். பிக்கள் மீண்டும் போட்டியிட மாட்டார்கள்

ஏப்ரல் 9 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பிரிட்டிஷ் தேர்தல் இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்மிகவும் நெருக்கமான போட்டிகளில் ஒன்றாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

அபிப்பிராயவாக்கெடுப்பின்படி ஆளும் கட்சி தொழிற்கட்சியைவிட சிறிது பின் தங்கிய நிலையில் உள்ளது.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் 651 ஸ்தானங்கள் உள்ளன தற்போதுள்ள எம்பிக்களில் மார்கிரட் தச்சர் முன்னாள் தொழிற்கட்சித்தலைவர் மைக்கேல்புட்டெனில் உட்பட 83 பேர் மீண்டும் தேர்தலில் நிற்கப்போவதில்லை என அறிவித்துள்ளனர்

# யாழ்தேவிப் பயணிகளின் டிக்கட்டுகளில் மோசடி

கொழும்பு கோட்டையிலிருந்து அதிகாலை 5, 45 மணிக்குப் புறப்படும் யாழ்தேவி ரயிலுக்கு வவுனியாவுக்குரிய கட்டணம் பெறப்பட்டு, அனுராதபுரத்திற்கான டிக்கட்டுக்கள் வழங்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது,

சில தினங்களுக்கு முன்னர் இவ்வாறான டிக்கட்டுக்களுடன் பயணஞ் செய்த 40 க்கும் மேற்பட்ட பயணிகள் வவுனியா புகையிரத நிலையத்தில் அகப்பட்டதையடுத்தே இந்த மோசடி அம்பலமாகியுள்ளது,

## வேளாண்மைப் போட்டியில் பரிசு பெறுவோர் விவரம்

(நேற்றைய தொடர்ச்சி)

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் யாழ். மாவட்டப் பிரிவினால் நடாத்தப்பட்ட வதிவிட வேளாண்மைச் செய்கைப் போட்டியில் சாவகச்சேரி, பளை, புத்தூர் கமநலச் சேவை நிலையப் பிரிவுகளில் பரிசுக்குரியோராய் தெரிவாகியுள்ளோர் விவரம் வருமாறு:-

சாவகச்சேரி:—

சின்னத்துரை துரைராஜா அல்லாரை வடக்கு, மீசாலை, இராசையா தயாவதி இராமாவில் கொடிகாமம். சுப்பிரமணியம் சடாட்சரம் கெற்பேலி கிழக்கு மிருசுவில்.

ஆறுதல் பரிசுகள்:

கனகசபை தெய்வேந்திரம் கில்மன் வீதி மீசாலை, குமாரசாமி ஜெயமுருகன் கில் மன் வீதி மீசாலை, காசிராசா சிவராசலிங்கம் இடைக்குறிச்சி வரணி, நடராசா நந்தகுமார் கில்மன் வீதி மீசாலை, வல்லிபுரம் வளர்மதி உசன் மிருசுவில், சின்னையா கந்தசாமி கரம்பைக்குறிச்சி வரணி, பாக்கியராஜ் தேவநேசம் கெற்பேலி கிழக்கு மிருசுவில், தேவநாயகி ராஜகுமாரன் இடைக்குறிச்சி வரணி, பாக்கியம் பெரியதம்பி வரணி வடக்கு. இராசம்மா கணேசமூர்த்தி வரணி வடக்கு.

பளை:—

காசிப்பிள்ளை நிரஞ்சன் புலோலி மளை வீதி பளை, கிருஷ்ணன்சின்னாச்சி மாசார் முருகந்த நகர் பளை, நமசிவாயம் சின்னத்துரை புலோப்பளை வீதி பளை.

ஆறுதல் பரிசுகள்:-

முருகர் நாகமுத்து முகாவில் உற்வாவிகற்பற்ற இயக்கச்சி சிதம்பரநாதன் கனகசிங்கம் மாசார் முருகந்தநகர் பளை, கதிரேசு கங்காதரம் பேராலை பளை, வைரமுத்து செல்வநாயகம் முகமாலை அம்பழவளை பளை, சேனாதிராசா செல்வநாயகம் பெரிய பலை பளை, சரவணமுத்து நடராசா வேம்பொடு கேணி பளை, இலக்கொழுந்து சிவபாதம் தம்பகாமம் பளை, ஆசீர்வாதம் ஞானாம்பிகை வேம்பொடுகேணி பளை, சேனாதிராசா ராசகுமாரி மாசார் பளை, சின்னர் தணிகாசலம் முகாவில் இயக்கச்சி.

புத்தூர்:—

தங்கேஸ்வரி கந்தையா ஆவரங்கால் மேற்கு நவக்கிரி, முத்துத்தம்பி ஜெயரட்ணம் ஆவரங்கால் மேற்கு புத்தூர், அரசரட்ணம் நிரஞ்சன் கருணாகரன் வீதி அச்செழு.

ஆறுதல் பரிசுகள்:

பத்மாவதி இயாகராசா முரளி வீதி ஆவரங்கால், குரஞ்சினி சின்னத்துரை நவக்கிரி புத்தூர் மேற்கு ஆவரங்கால், விநாயகமூர்த்தி சகாதேவன் ராஜ வீதி தோப்பு அச்சுவேலி, விமலாதேவி ஆறுமுகம் புத்தூர்வடக்கு புத்தூர், நீலன் மார்க்கண்டு நவக்கிரி மேற்கு புத்தூர். கனகசபாரத்தினம் தயானந்தி நரசிங்கர் வீதி அச்செழு, தவமணி சிறுபிட்டி தெற்கு நீர்வேலி, கந்தர் முருகேசு புத்தூர் கிழக்கு புத்தூர், பாலசிங்கம் கருணானந்தம் ஏரத்தனை புத்தூர் வடக்கு. கோபாலசிங்கம் சிறிகாந்தராசா அச்செழு நீர்வேலி,

(மிகுதி நாளை)

# குடி பெயர்ந்தோருக்கு கெற்பலியில் பண்டிதர் குடியிருப்பு

**- சங்கர்**

யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் எழுதுமட்டுவாள் சந்திக்குத் தெற்கே செல்லும் வீதியில் 4 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது கெற்பலி கிராமம்.

புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, வேலணை, மண்டைதீவு போன்ற தீவகப் பிரதேசங்களிலிருந்து சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாகக் குடிபெயர்ந்து யாழ்நகரின் சில பகுதிகளிலும், அரியாலையிலும் வாழ்ந்து வந்த குடும்பங்களை ஒருங்கிணைத்து ஒரே இடத்தில் குடியமர்த்தும்பொருட்டு இந்தக் கிராமத்தில் ஓர் குடியிருப்பு அமைக்கப்பட்டுள்ளது.

எளிமையுடனும், அடக்கத்துடனும், அர்ப்பணிப்புடனும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை வளர்த்த யாழ். மாவட்ட ஆரம்பத் தளபதி பண்டிதர் பெயரில் இந்தக் குடியிருப்பு அமைந்திருப்பது மிகப் பொருத்தம் அதனால் அது 'பண்டிதர் குடியிருப்பு' என அழைக்கப்படுகிறது.

சுமார் 250 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தென்னந்தோட்டத்தின் முக்கிய பகுதியில் இக்குடியிருப்பு அமைக்கப்பட்டுள்ளது,

இந்தக் குடியிருப்பின் திட்டமிடலைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகமே மேற்கொண்டது. இந்தப் பணியில் யாழ், செயலக புனர்வாழ்வுப் பிரிவைச் சேர்ந்த செய்திட்டப் பணிப்பாளர் திரு, செ, பத்மநாதனும், உதவிச் செய்திட்டப் பணிப்பாளர் தரு செல்வனும் தமது பங்களிப்பைச் செய்து உதவியுள்ளனர்,

2000 குடிபெயர்ந்த குடும்பங்களைக் குடியமர்த்திப் பராமரிக்கக் கூடியவகையில் இத்திட்டம் வரையப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்குடியிருப்பு கிராமிய நிர்மாணப் பரிமாணங்களை உள்ளடக்கி மிகவும் அவதானமாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரு புதிய கிராமத்தை அல்லது நகரத்தை அமைக்கத் திட்டமிடும்போது சிரமமின்றிச் சென்றடையக் கூடிய பாதையமைப்பு மற்றும் வைத்தியசாலை, பாடசாலை, அத்தியாவசிய பொருள்கள் விநியோக அமைப்பு என்பன உள்ளடக்கப்பட்ட உட்கட்டமைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும் என்பது சகலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையாகும்,

இந்தக் கொள்கை கெற்பலி 'பண்டிதர் குடியிருப்பு' அமைப்பில் முக்கியம் பெற்றுள்ளது

இந்தக் குடியிருப்புப் பற்றியும், அங்கு வாழும் குடிபெயர்ந்த மக்களின் நிலைமை பற்றியும் அறிந்து கொள்ள 07-03-92 ஆம் திகதி நாம் அங்கு சென்றிருந்தோம்.

நாம் குடியிருப்பை அண்மிக்கும்போதே 'தமிழர் புனர்வாழ்வுக் கழகம்' என்ற வாசகத்தைக் கொண்ட விசாலமான பொது மண்டபமும், தனியான அலுவலகமும் தெரிகின்றன. இந்தப் பொது மண்டபத்தில் மக்கள் சந்திக்கவும், பத்திரிகைகள் வாசிக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நாம் சென்ற சமயம் தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயலர் திரு. யோகநாதனும் அங்கு வந்திருந்தது எமது பணியை இலகுபடுத்தியது.

## குடியிருப்புப் பாடசாலை

முதலில் இரண்டு வாரங்களுக்கு முன்பு இக்குடியிருப்பில் ஆரம்பித்து வைக்கப்பட்ட பாடசாலைப் பகுதிக்குச் சென்றோம். கிடத்தட்பளை கமலாசனி வித்தியாசாலையின் கிளையாகவே இப்பாடசாலை நிர்வகிக்கப்படுகின்றது. இப்பாடசாலைக்கு வடக்கே குளம் ஒன்று இருப்பது சூழ்நிலையை அழகுபடுத்துவதாக உள்ளது

மூன்று மண்டபங்களைக் கொண்ட இப்பாடசாலையில் 14 வகுப்பறைகளும் ஒரு அலுவலகமும் உள்ளன 12 வகுப்பறைகள்வரையில் பல பகுதிகளிலுமிருந்து சேகரிக்கப்பட்ட மரத்தளபாட வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

ஆண்டு ஒன்று முதல் ஆண்டு பதினொன்று வரை கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது இப்பொழுது 557 மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றனர், ஆண்டு 1 முதல் ஆண்டு 6 வரையான வகுப்புகளில் 50 க்கும் மேற்பட்ட மாணவர்களும், ஆண்டு 7, 8 ஆகியவற்றில் 45 மாணவர்களும் மேலும் ஆண்டு பதினொன்றில் 19 மாணவர்களும் கல்வி கற்கின்றனர்.

இப்பாடசாலையில் கல்வி கற்பிப்பதற்கென கல்வித் திணைக்களம் ஏற்கனவே நான்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமித்துள்ளது மேலும் மூவர் விரைவில் இவர்களுடன் இணைந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது,

மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களைக் கல்வித் திணைக்களமும், அப்பியாசக் கொப்பிகளைப் புனர்வாழ்வுப் பகுதியும் வழங்கியுள்ளன. இவற்றின் ஒரு தொகுதி குடியிருப்பு அலுவலகத்தில் காணப்பட்டது.

ஆண்டு 1 முதல் ஆண்டு 6 வரையான வகுப்புகளில் கற்பிப்பதற்காக இக்குடியிருப்பிலும், கிடத்தட்பளையிலும் உள்ள க. பொ. த. (சாதாரண / உயர்தர) பரீட்சைகளில் சித்தி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

## பாலர் பாடசாலையும், சத்துணவு மையமும்

இங்கிருந்து பாலர் பாடசாலைப் பகுதிக்குச் சென்றோம். அங்கு 167 பாலர்களுக்குக் கல்வி கற்பிக்கப்படுவதாகத் தொண்டர்கள் கூறினர்.

பாலர் பாடசாலையுடன் இணைந்து சத்துணவுத் திட்ட மையமும் அமைக்கப்பட்டிருந்தது. சுமார் 361 ஐந்துவயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும், 22 கர்ப்பவதிகளுக்கும், 27 பாலூட்டும் தாய்மார்களுக்கும் கடலை, சோயா, பால் போன்ற போஷாக்குணவுகள் வழங்கப்படுகின்றன,

இச்சேவைகளை குடியிருப்பிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 40 தொண்டர்கள் வழங்கி வருகின்றனர்.

## வைத்தியசாலையும், சுகாதார சேவையும்

இதன்பின்னர் வைத்தியசாலைக்குச் சென்றோம், அங்கே ஓர் பெண் வைத்தியரும், இரண்டு உதவியாளரும் சேவையாற்றுகின்றனர்,

இக்குடியிருப்பில் சேவையாற்றுவது தமக்கு மிகவும் திருப்தியளிப்பதாகக் கூறிய வைத்தியர் மருந்து இருப்புகளும் திருப்திகரமாக இருப்பதாகவும் குறிப்பிட்டார். இதற்கு முதல்நாள் 40 பேருக்கு வைத்தியம் செய்ததாகவும் அவர் கூறினார், மக்களின் சுகாதாரம், போஷாக்கு நிலை பற்றி நாம் கேட்டபோது பல பிள்ளைகளுக்குப் பாண்டுநோய் கண்டிருப்பதாகவும், போஷாக்கின்மை நிலவுவதாகவும் கூறினார்.

இக்குடியிருப்பின் சுகாதாரத் தேவைகளைக் கவனிக்கச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவரும், பொது மருத்துவத்தாதி ஒருவரும் சேவை செய்கின்றனர்,

## குடியிருப்புகள் அமைப்பு

இங்கிருந்து குடியிருப்புகளைச் சுற்றிப் பார்க்கச் சென்றோம்.

குடிசைகள் நிரல் வரிசைகளில் அமைக்கப்பட்டு ஒவ்வொரு வரிசைக்கும் இலக்கம் கொடுக்கப்பட்டிருந்தது.

இதுவரை 490 குடிசைகளில் 538 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இக்குடிசைகள் தென்னங் கிடுகுகளினால் வேயப்பட்டும், சுற்றியடைக்கப்பட்டும் உள்ளன

குடிசை வரிசைகளின் முகப்புக்களில் 35 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 8 அடி ஆழமுள்ள இக்கிணறுகளில் நீர் வற்றியுள்ளதால் அவற்றை மேலும் ஆழமாக்க வேண்டுமெனத் தம்மைச் சந்தித்த வரிசைத் தலைவர்களிடம் திரு யோகநாதன் தெரிவித்தார்

குடிசை வரிசைகளுக்குப் பின்புறமாக 35 மல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன, மேலும் 65 மல கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இக்குடியிருப்பிலுள்ளவர்களுக்கான சமையல் பாத்திரங்களையும், உடுப்புகளையும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ இ) வழங்கியுள்ளது.

குடிசைகளைச் சுற்றி வந்தபோது அங்குவசிக்கும் மக்களின் கஷ்டங்களையும், துன்பங்களையும், ஏக்கம் குடி கொண்ட முகங்களையுமே எம்மால் பார்க்கக் கூடியதாக இருந்தது.

பல குடிசைகளில் ஆடைபேதுமில்லாத குழந்தைகள் மண்ணில் விளையாடிக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

## குடியிருப்புக் குடும்பங்களின் பரிதாப நிலை

நாம் எதேச்சையாக ஒரு குடிசை முன் சென்று அந்தக் குடிசையில் வசிக்கும் 42 வயது, வீரவாகு சண்முகலிங்கம் என்பவரைச் சந்தித்தோம் நான்கு சிறுபிள்ளைகளுக்குத் தந்தையான இவர் ஓர் நோயாளி, தொழில் எதுவும் செய்யமுடியாத அளவுக்குப் பலவீனமடைந்துள்ளார், எம்முடன் கதைக்கும்போதே அவரின் கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன

இவரது மனைவி சுகவீனமுற்று 21 நாட்களாக யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் உள்ளார், அவருடன் ஒரு பிள்ளையும் வைத்தியசாலையில்! இந்த 21 நாட்களாகத் தாமும் மூன்று பிள்ளைகளும் வைத்தியசாலைக்குச் செல்ல முடியவில்லையென்றும் அதற்குப் பணவசதியில்லையென்றும் தெரிவித்த சண்முகலிங்கம், மனைவியும், பிள்ளையும் என்ன நிலையில் உள்ளார்கள் என அறியக் கூட முடியவில்லையெனக் கவலைதோயத் தெரிவித்தார்,

இவரின் இரண்டு பிள்ளைகள் மிகவும் பலவீனமானவர்களாகத் தோன்றினர். ஒரு பிள்ளைக்கு நிச்சயம் பாண்டுநோய் என்பது தெரிந்தன.

இந்தக் குடும்பத்தின் நிலைக்கு ஒத்த நிலையில் பல குடும்பங்கள் இருந்தது எமது மனதை மிகவும் உறுத்தியது

எம்மைக் கண்டதும் சில பெண்கள் குடிசைகளுக்குள் ஒதுங்கிக் கொண்டதையும் நாம் அவதானித்தோம் பலருக்கு போதிய ஆடை வசதியின்மையே இதற்குக் காரணம் என்பது எமக்குத் தெளிவாகத் தெரிந்தது.

சில பெண்கள்வருமானத்துக்காகப் பனையோலைப்பாய்களை இழைப்பதையும் கவனிக்கக் கூடியதாகவிருந்தது, சில குடிசைகளுக்கு முன்பாக விறகு வியாபாரம் செய்யும் துவிச்சக்கர வண்டிகள் நிற்பதையும் காண முடிந்தது.

## குடியிருப்புப் பிரச்சினைகளை ஆராய்தல

இவற்றை முடித்துக் கொண்டு ஒவ்வொரு வரிசைக்கும் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களைச் சந்திக்கவென பொது மண்டபத்துக்குச் சென்றோம் செல்லும்போது மேலும் குடிசைகள் அமைப்பதற்கான மரவேலை ஏற்பாடுகள் நடைபெறுவதையும் ராக்டர் மூலம் தென்னங் கிடுகுகள் கொண்டு வந்து இறக்கப்படுவதையும் அவதானித்தோம், குடியிருப்புகளுக்கு வழங்குவதற்கு வாழைக்குற்றிகளும் கொண்டு வரப்பட்டு இறக்கப்பட்டதையும் காணமுடிந்தது,

நீண்ட விசாலமான பொதுமண்டபத்தில் வரிசையாகத் தலைவர்கள் மட்டுமல்ல பல பெண்களும் கூட குழுமியிருந்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகச் செயலாளர் கலந்துரையாடலை ஆரம்பித்து பிரச்சினைகளை எடுத்துக்கூறுமாறு கோரினார்.

## சுயதொழில் கடன வசதிகள்

பலரும் தொழில்வாய்ப்புக்கள் பற்றியும் அதிகரித்த கடன் வசதிகள் பற்றியுமே குறிப்பிட்டனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இதுவரை எட்டுலட்சம் ரூபாவரை 200 பேருக்கு கடனுதவியாக வழங்கியுள்ளது.

வழங்கப்பட்ட கடன்களை முறையாக பயன்படுத்துவது பற்றியும் எடுத்துக்கூறப்பட்டது.

மீன்பிடித் தொழில் செய்பவர்கள் தமக்கு கடனுதவி போதாதுஎன்றனர். இரண்டு இழை 2½ 2¾ அங்குல வலை தொழிலுக்குத் தேவையென்றும் நான்கு பேருக்கு ஒரு வள்ளமாவது வேண்டுமெனவும் தெரிவித்தனர் செயலாளர் தமது நிலையைத் தெளிவுபடுத்தி முற்றிலும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனமான தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துக்கு உள்ள நிதி தட்டுப்பாடுகளை எடுத்துக் கூறியதுடன் கடன் அறவீடுகள் மூலம் பெறப்படும் பணத்தின் மூலம் மேலும் கடன் வசதியளிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

குடியிருப்புக்கென ஈரப்பந்தாட்ட திடலை நிர்ணயித்து வேண்டிய உபகரணங்களைப் பெற்றுத்தருமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை ஏற்கப்பட்டது.

## நிவாரணம்

அங்கு குடியிருந்த பலரும் ஏகோபித்த விதத்தில் தமக்கு வழங்கப்படும் நிவாரணம் பற்றியே குறிப்பிட்டனர்,

17 2 1992ஆம் திகதியே கடைசியாக இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. 02 3 92ஆம் திகதி வரை அடுத்த நிவாரணம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

''ஒரு கிழமையாக எந்த உதவியும் இல்லையென்றால் நாங்கள் எங்கே போவோம்? என்ன செய்வோம்'?'' என்று ஒரே குரலில் அவர்கள் கேள்வியெழுப்பினர்,

தமக்கான நிவாரணம் உரிய நேரத்தில் கிடைக்க ஒழுங்கு செய்யும்படி வற்புறுத்திக் கேட்டனர். விநியோகங்கள் இரண்டு வாரத்திற்கொரு முறை வழங்கப்படுவது தமக்கு அசௌகரியமாகவிருப்பதாகவும் அவை வாராந்தம் வழங்கப்படவேண்டுமெனவும் கோரினர்,

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை

இக்குடியிருப்பில் தென்மராட்சி கிழக்கு (கொடிகாமம்) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்றை அமைக்கவெனத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஓர் கட்டிடத்தை அமைத்துக் கொடுத்துள்ளது. ஒரு கிளையும் திறக்கப்பட்டுள்ளது, ஆனால் ஒழுங்காகத் திறந்திருக்காததினால் குடியிருப்பு மக்கள் மிகவும் இக்கட்டுக்குள்ளாவதை அவர்களின் ஆதங்கப் பேச்சுக்கள் வெளிப்படுத்தின ஏனைய கிளைகளைப் போல் இதுவும் திறக்கப்பட வேண்டுமெனக் கோரினர்,

மேலும் நிவாரண விநியோகத்திற்கு மட்டுமல்ல, கட்டுப்பாட்டு விலையில் அத்தியாவசியப் பொருள்களை விற்பதற்கும் இக்கிளை திறந்திருக்க வேண்டும் எனவும் கோரப்பட்டது,

## அதிகரித்த விலையில் விற்பனவு

நியாயவிலை என்று ஏன் அழுத்தம் செய்கிறார்கள் என நாம் வினாவினோம். சங்கக் கிளையில் அரிசி கிலோ ரூபா 26/- ஆகவும், கோதுமை மா கிலோ 18 ரூபாவாகவும், சீனி கிலோ ரூபா 38/- ஆகவும் விற்கப்படுவதைக் குடியிருப்பு மக்கள் சுட்டிக்காட்டினர், இதன் பொருட்டு ஓர் பற்றுச்சீட்டையும் நாம் பார்வையிட்டு சீனி ரூபா 38/- வுக்கு விற்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திக் கொண்டோம். இந்தக் குறைபாடு உடன் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் எனக் குடியிருப்பு மக்கள் மட்டுமல்ல நாமும் எதிர்பார்க்கிறோம்,

இந்தக் கலந்துரையாடலை முடித்துக் கொண்டு குடியிருப்பு அலுவலகத்துக்குச் சென்றோம்; இக்குடியிருப்பு நிர்வாகத்தைக் கவனிக்கவென திரு தவராசா திரு, யோகேந்திரா ஆகியோரும் அவர்களுக்கு உதவியாக வேறு இருவரும் சேவையாற்றுகின்றனர். குடியிருப்பு மக்களின் பிரச்சினைகளை இவர்கள் அனுதாபத்துடன் அணுகித் தீர்த்து வைப்பதை அவதானிக்க முடிந்தது. எனினும் இப்பணி சிரமமானது என்பதனையும் உணரக் கூடியதாகவும் இருந்தது.

(- 4-ஆம் பக்கம் பார்க்க)

# இவ்வார இராசி பலன்

**15-3-92 - 21-3-92**

மேடம் :- உங்களுக்குப் பொருள் சம்பந்தமான காரியங்கள். தொழில் சிறப்புக்களுக்கு அறிகுறி தென்படும். பெரியவர்கள் உதவுவார்கள், தந்தைவழி உறவினர்களால் உதவிகள் கிடைக்கும், தேகசுகயீனங்களால் சிலருக்கு தாமதப்பலன் கொடுக்கும், சகோதரர்கள் அல்லது பிள்ளைகளால் மன வேதனை யோசனைஏற்படும். புதிய திட்டங்களை உருவாக்கும் சிந்தனை ஏற்படும், தெய்வசிந்தனையால நற்பலன்கள் கொடுக்கும், அயலவர்களால் அவதிகள், பயம் ஏற்படும் சிலர் சளி, காச்சலால் வருந்தி வைத்தியம் செய்வார்கள்.

இடபம்:- உங்களுக்கு வீட்டில் சகோதரங்களாலும், சகோதர வழியினராலும் அபிப்பிராய பேதங்கள் ஏற்படும், நீங்கள் எந்த நன்மை செய்தாலும் குறைகுற்றமே கேட்பீர்கள், தொழில் ஸ்தானத்தில் நல்ல வரவேற்பை எதிர்பார்க்க முடியாது. எதிர்பாராமால் கஷ்டங்கள் ஏற்படும், போக்குவரத்தில் கவனமாக இருக்கவும், பொருள்தவறுதல் அளவு அல்லது காய்ச்சல் வர இடம் உண்டு, பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும்.

மிதுனம் :- உங்களுக்கு ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் நடக்கும், பிடிவாதத்தாலும், உங்களின் கவலையினத்தாலும் பல காரியங்களின் அலுவல்கள் மந்தநிலை அடையும் சகோதரங்களுக்கு மாற்றங்கள் நற்பலன்கள் நடக்கும், பொருள் செலவு, வைத்தியத்தால் செலவு அடிக்கடி கட்டுமீறி இருக்கும் பிரயாணம் ஒன்று தடைப்படும், அயலவர்களால் உதவிகள் கிடைக்கும்.

கர்க்கடகம் ;- எதற்கெடுத்தாலும் உங்களுக்குத் தடை, தாமதம் கொடுக்கும், குடும்பத்தில் அபிப்பிராய பேதம் ஏற்படும், இடமாற்றம் செய்ய யோசிக்காதீர்கள், அதனால் இழப்புக்கள், துன்பங்கள் ஏற்படும், செலவுகள் அதிகரித்தாலும், நன்மையான பலன்களை அதனால் கொடுக்கும் தொழில் ஸ்தானத்தில் சில பிரச்சினைகள் கொடுக்கும், தெய்வ வணக்கத்தால் ஓரளவு ஆறுதல் அடைவீர்கள்.

சிங்கம் :- உங்களுக்கு உற்சாகமாக இருக்கும், குடும்பத்திலும் கலகலப்பாக இருக்கும், சகோதரங்களுக்கு நல்ல பலன்களைக் கொடுக்கும், அவசரப்பட்டு இடமாற்றங்களைச் செய்வாதிர்கள் அதனால் பின்னர் கவலை அடைவீர்கள், மாமன் வழியினருக்கு நல்லதல்ல, தொழில் ஸ்தானத்தில் மாற்றங்களை அவதானிப்பீர்கள் புதிய திட்டங்கள் உருவாக இடம் உண்டு. வாரக்கடைசி நாள்கள் நல்லதல்ல, பொருளில் கவனமாக இருக்கவும்.

கன்னி :- உங்களுக்கு எதிர்பாராத திசை திருப்பங்கள் அல்லது செய்திகள் வரும், பெற்றோருடன் வாக்குவாதம் அல்லது அபிப்பிராயபேதம் கொடுக்கும் பலனைக் காட்டுகின்றது. தொழில் இடத்தில் மந்தநிலை, சகோதரங்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும். நீங்கள் பொறுமையைக் கடைப்பிடித்து காரியங்களைச் செயற்படுத்துங்கள் அல்லது நஷ்டங்களும் வீண் அலைச்சலும் ஏற்படும் நண்பர்களும், பெரியவர்களும் உதவி செய்வார்கள்.

நல்லூர் சோதிடர்
இ.மகாதேவா

துலாம் :- உங்கள் சகோதரங்களுக்கு நல்லதல்ல, குடும்பத்தில் செய்திகள் வாதங்கள் கொடுக்கும் தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்திருக்கும், பொருள்செலவு அல்லது களவு போக இடம் உண்டு இனசனத்தின் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளுவீர்கள். உஷ்ணவியாதிகள் வரலாம், கடினப்பேச்சால் கலக்கம் அடைவீர்கள் கைகால் விறைப்பு கொடுக்கும், வைத்தியம் செய்யவும்.

விருச்சிகம் ;- உங்கள் சகோதரர்களுக்கு நல்லதல்ல, பல், வாயில்வருத்தம்வரும். வீட்டில் குழப்பமும், அபிப்பிராயபேதங்களும் ஏற்படும், தொழில் ஸ்தானத்தில் நற்பலன்கள் கொடுக்கும், அயலவர்களுடன் மனஸ்தாபப்பட வேண்டி வரும், சாதுரியப் பேச்சால் சில காரியங்களைச் சாதித்துக் கொள்ளுவீர்கள், உங்களில் சிலர் கடன்பட்டுச் செலவு செய்வீர்கள், போக்குவரத்தில் அவதானமாகஇருக்கவும், நண்பர்கள் அல்லது பெரியவர்கள் உதவி செய்வார்கள்.

தனு :- நீங்கள் காரணம் தெரியாமல் அடிக்கடி கோபித்துக் கொள்ளுவீர்கள், அஜீரணம் ஏற்படும், சகோதர வழியில் வீண் மனஸ்தாபங்கள ஏற்படும், எக்காரியங்களையும் இரகஸியமாகச் செய்யவும் அதனால் நற்பலன் அடைவீர்கள், இரகசியமற்றவிடத்து தோல்வி அடைவீர்கள், பொதுஜன உதவிகள் கிடைக்கும், தந்தை வழியினர் உதவிகளைச் செய்வார்கள், இடமாற்றங்களால் நற்பலன் ஏற்படும்.

மகரம்:- உங்களுக்கும் சகோதரங்களுக்கும் இடையில் அபி-பிராய பேதங்கள் ஏற்படும், அடிக்கடி பல யோசனைகள் ஏற்படும், எந்த விஷயத்திலும் ஒரு மந்தம் போக இருக்கும், தந்தைவழியினருக்கும் நல்லதல்ல, பிரயாணங்கள், இடமாற்றங்கள் செய்யலாம் வெளிநாட்டுச் செய்தி அல்லது தூர இடங்களிலிருந்து வரும் செய்திகளால் ஆறுதல்கள் இருக்கும் குடும்பத்தினரால் ஆறுதல்கள் இருக்கும், தெய்வபக்தியால் ஓரளவு நற்பலன்கள் கிடைக்கும்.

கும்பம் :- உங்களுக்கு அடிக்கடி கோபங்கள் வரும், தேவையற்ற விஷயங்களால் வேதனைகளும், மற்றவர்களின் பேச்சுக்கு ஆளாக நேரிடும், கட்டுமீறிய செலவுகளால் கடன்படும் நிலை ஏற்படும், பெரியவர்களாலும், நண்பர்களாலும் உதவிகள் கிடைக்கும் பெண்களால் வீண் தொல்லைகள் ஏற்படும், எந்த பொறுப்புக்களையும் ஏற்கவேண்டாம், காணி, பூமி சம்பந்தமான தலையிடி பிரச்சினை கொடுக்கும் சிலருக்கு விசாரணைகள், சச்சரவுகள் கொடுக்கும் குல தெய்வ வழிபாடு முக்கியமாகும்.

மீனம் ;- உங்களுக்குப் பொறுமையற்ற காலமாகும், இருப்பினும் சாதுரியமாகச் சில காரியங்களைச் செயற்படுத்துவீர்கள், அன்னியர்களாலும், உங்களுக்குக் கீழ் வேலை செய்பவர்களாலும் வீண் தொல்லைகள் ஏற்படும். பிரயாணங்களால் இலாபங்கள் இடைக்கும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள் சிலருக்கு இடமாற்றங்கள் கொடுக்கும்' அயலவர்களாலும். சகோதரங்களாலும் வீண் யோசனைகள் ஏற்பட்டபடி இருக்கும் பண விஜயத்தில மிகக் கவனமாக இருக்கவும்.

## குடிபெயர்ந்தோருக்கு.....

### பிரச்சினைகளுக்குத் தீர்வு

நாம் பேசிக் கொண்டிருந்த போதே ஒரு குடும்பப்பெண் வந்து தமது கணவர் மூன்று நாள்களுக்கு முன்பு இறந்து விட்டதாகவும் அவர் எடுத்த ரூபா 3000/— கடனில் ரூபா 2000 மட்டுமே மீளச் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து தமக்கு உதவி கோரினார்

இவரிடமிருந்து ரூபா 1000/- மிகுதிக் கடனை அறவிட வேண்டாமெனவும் செலவு நிகழ்ச்சிக்காக உணவுப் பொருள்களை உதவியாக வழங்கும் படியும்செயலாளர் திரு, யோகேந்திராவைக் கேட்டுக்கொண்டார் இப்படியான உதவி முன்னரும் இரு குடும்பங்களுக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவரைத் தொடர்ந்து இன்னுமொரு குடும்பப் பெண் தமது கணவர் உழைக்க முடியாதவர் என்றும் தமது குழந்தைக்கு பால் மா கூட வாங்க முடியாமல் தவிப்பதாகவும் தெரிவித்தார்

திரு. யோகேந்திராவுடன் ஆலோசித்த பின்பு ஏற்கனவே இனங்காணப்பட்ட 161 விதவைகள் கண்பார்வையற்றவர்கள் உழைக்க முடியாதவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மேலதிக உதவியாக உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதற்கான தீர்மானத்தை செயலாளர் யோகேந்திராவுக்கு தெரிவித்தார் இதைத் தொடர்ந்து உடனடியாகவே ஒரு பைக்கற்பால் மா அந்தத்தாய்க்கு வழங்கப்பட்டது

இத்தனை விவரங்களையும் தெரிந்து கொண்டநாம் இத்திட்டத்தின் நிதியேற்பாடு பற்றி திரு யோகநாதனிடம் கேட்டோம் இக்குடியிருப்பில் அமைக்கப்படும் குடிசைகள் கிணறுகள், மலசலகூடங்கள், ஏனைய சேவை நிலையங்களுக்கான மொத்தச் செலவில் எழுபத்தைந்து வீதத்தை யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினரும் மிகுதியை தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் செலவு செய்வதாக அவர் தெரிவித்தார்.

இந்தச் சூழலில் தும்புத் தொழிலில் ஈடுபடக் கூடிய வாய்ப்புகள் அதிகம் இருப்பதையும் அவதானித்துக் கொண்டோம்

### உணர்வுகள் பகிரப்படும் போது

நாம் யாழ் நகர் திரும்பும் போது இங்கே நாம் பார்த்த நிகழ்வுகளும் நிலைகளும் எமது உள்ளத்தை உருக்கவும் உலுக்கவும் செய்தது கொட்டில்களானாலும், குடிசைகளானாலும் தமது என்று வாழ்ந்தவர்கள் தீவகத்தில் பல பகுதிகளிலும் இருந்து இங்கு வந்து இன்னுமொரு சமூகத்தை அமைத்து வாழ முயல்வதையே பார்க்கிறோம் ஏக்கமும் எதிர்பார்ப்புகளும் காணப்படும் ஒவ்வொரு தாயினதும் தந்தையினதும் குழந்தையினதும் முகங்கள் எம்மை மட்டுமல்ல எவரையும் கவலைப்படுத்தவே செயும்

எனினும் யாழ் கச்சேரியும் குறிப்பாக அதன் புனர்வாழ்வுப் பிரிவும், தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் இணைந்து செயற்பட்டதால் தான் இப்படியான ஒரு "குடியிருப்பை உருவாக்கி நிர்வகிக்க முடிகிறது என்பதை குறிப்பிட வேண்டும் இக்குடியிருப்பு மேலும் விஸ்தரிக்கவும் இவர்கள் திட்டமிட்டுச் செயற்படுவதும். வரவேற்கப்பட வேண்டிய அம்சமாகும்.

### இவர்களும் போராளிகளே

குடியிருப்பு மக்களைப் பொறுத்தவரை அவர்களும் தமிழீழப் போராளிகள் தான் என்றே எமக்குத் தோன்றுகிறது.

வாழ்க்கையுடனும், வறுமையுடனும் வசதியீனங்களுடனும், பசி பட்டினியுடனும் இவர்கள் போராடிக்கொண்டிருப்பது தமிழீழ விடுதலைக்கான பங்களிப்பே, என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாதென நம்பலாம்.

## 4 லொறிகளில் மரம் கடத்தல் இராணுவத்தினர் மீது விசாரணை

திருகோணமலையிலிருந்து அனுமதியின்றி பல லட்சம் ரூபா பெறுமதியான மரங்களை 4 லொறிகளில் கடத்தியபோது கைதான மூன்று ராணுவத்தினர் மீது ராணுவ விசாரணை நடைபெற்றது.

ஆயுத பாணிகளாக சீருடையில் இவர்கள் லொறியில் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

இடைவழியில் பொலிஸார் சோதனையிட்டபோது லெப்டினற் கேணல் ஒருவரின் கடிதத்தை பொலிஸாருக்கு காண்பித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது, (06)

## தமிழர்களுக்குநஷ்டஈடுவழங்காது கர்நாடக அரசு அலட்சியம்

கர்நாடகத்தில் ஏற்பட்ட வன்செயலினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க கர்நாடக அரசு நடவடிக்கை எடுக்காது. அக்கறையின்றிக் காலந் தாழ்த்தி வருவதாக இந்திய ராஜ்யசபாவில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ராஜ்யசபாவில் உரை நிகழ்த்திய தமிழக உறுப்பினர்கள் பலரும் இக் குற்றச்சாட்டைச் சுமத்தினர்.

நஷ்ட ஈடு வழங்கும் விடயத்தில் கர்நாடக அரசு அக்கறையின்றியிருப்பதனால் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு, பாதிப்புற்றோருக்குத் தகுந்த நஷ்ட ஈடு வழங்கப்படுவதைக் கண்காணிக்க சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஒருவரைத் தலைவராகக் கொண்ட விஷேட ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறும் தமிழக உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

## 'ஐலண்ட்' செய்திக்கு எயர் லங்கா மறுப்பு

எயர் லங்காவுக்கு புதிய விமானங்கள் ஓரளவுக்கு செலவற்றவை என 'ஐலண்ட்' பத்திரிகையில் வெளியான செய்திக்கு எயர் லங்கா நிறுவனம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

அத்துடன் அரசாங்கத்தின் பணத்தில் புதிய விமானம் கொள்வனவு செய்யப்பட்டதாக வந்த செய்தியும் தவறானது என்றும் எயர் லங்காவின் வருமானத்தில் வாங்கப்பட்டதாகவும் நிறுவனப் பணிப்பாளர் சபை அறிவித்துள்ளது.

## முதல்வருட நிறைவு அமர்வு

யாழ். விஞ்ஞான சங்க முதல்வருடநிறைவுப் பொதுக்கூட்டம். 23-04-1992 தொடக்கம் 25-04-1992 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் அ துரைராசா அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் விமர்சனக் கட்டுரைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், கருத்தரங்குகள், தலைவரின் உரை, மாணவர்களுக்கான பரிசு வழங்கல் என்பன நடைபெறவிருக்கின்றன, இதில் புதிய நிர்வாகச் சபை உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்படுவர், அச்சுருவில் தலைமை உரையும், கட்டுரைச் சுருக்கங்களும், இவ்வமர்வில் விநியோகிக்க படும்,

உறுப்பினர்கள் 1992 ற்கான அங்கத்துவத்தைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் எனவும், புதிய அங்கத்தவர்களாகச் சேர விரும்புபவர்கள் செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படியும் அறிவிக்கப்படுகிறார்கள்.

## தொழிற்சங்கத்திலிருந்து விலகுமாறு பயமுறுத்தல்

மலையகத்தில் உள்ள தொழிற் சங்கப் பிரமுகர்கள் இருவரைப் பதவியிலிருந்து ராஜினாமா செய்யுமாறும், அல்லது கடத்தப்பட்டு கொல்லப்படுவீர்கள் என ஆயுத பாணிகளான சிலர் இரவு நேரம் மிரட்டியதாக ஜனாதிபதிக்கு முறையிட்டுள்ளனர்.

இவர்களின் வீட்டிற்கு இரவு வந்த ஆயுதம் தாங்கியவர்களே இவ்வாறு பயமுறுத்தியதாகவும் புகாரிடப்பட்டுள்ளது.

## வலைப்பந்தாட்ட போட்டி முடிவு

யாழ் மாவட்ட விளையாட்டுக் குழுவினரால் நடாத்தப்படும் வலைப்பந்தாட்டப் போட்டித்தொடரில் நேற்று முன்தினம் தமிழ் கன்னியர் மட பாடசாலை விளையாட்டரங்கில் இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் சென் அந்தனிஸ் அணி சென்றோக் விளையாட்டுக் கழக அணியை 16;13 என்ற புள்ளிகள் கணக்கில் தோற்கடித்தது செல்வி அருளப்பு சுமதி லெகு திறமாக ஆடி ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றார், 16

### சிறு விளம்பரம்

**தவறிவிட்டது**

10 ஆம் திகதி ஊரியான் என்ற இடத்தில் ரூ 20,000 தொலைந்து விட்டது எடுத்தவர்கள் தயவு செய்து மேற்கூறிய விலாசத்தில் தொடர்பு கொள்ளவும், சந்திரபாலன் சுழிபுரம் மத்தி ஐ.எ.வி,லேன் சுழிபுரம். 03031

# துருக்கியில் நேற்றுமுன்தினம் நிகழ்ந்த நிலநடுக்கத்தில்

# 1000 பேர்வரை பலி; பல கட்டிடங்கள் தரைமட்டம்

துருக்கியின் கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கமொன்றில் 1000 பேர் வரையில் உயிரிழந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது.

துருக்கியின் கிழக்குப் பகுதியிலுள்ள 3 இலட்சம் மக்கள் வாழும் மூன்று முக்கிய மாகாணங்கள் இந்த நிலநடுக்கப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

அப்பகுதிகளிலுள்ள பல மருத்துவமனைகள், மருத்துவக்கல்லூரி ஒன்று, அரச குடியிருப்புகள், அரச அலுவலகங்கள் பல குடிசைகள் என்பன உட்பட இப்பகுதியிலுள்ள அரைவாசிக் கட்டிடங்கள் இப் பூமியதிர்ச்சியினால் தரைமட்டமாகியுள்ளன.

மருத்துவக்கல்லூரி இடிந்து விழுந்ததில் அதிலிருந்த 65 மருத்துவ மாணவர்களும் பலியாகினர். பல வைத்தியசாலைகளும் தரைமட்டமாகிவிட்டதனால் காயமடைந்தோருக்கு சிகிச்சை வழங்க முடியாதிருப்பதாகவும், மீட்புப் பணிகள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

இறந்தோரில் 400 பேரின் சடலங்கள் மட்டுமே இதுவரை மீட்கப்பட்டுள்ளன. 1983க்குப் பின்னர் இப் பகுதியில் ஏற்பட்ட பெரிய நிலநடுக்கமாக இது கருதப்படுகின்றது.

துருக்கியின் 66 மாநிலங்களில் 24 இல் இந்த நிலநடுக்கத்தை உணர முடிந்தது.

## சுதந்திரக்கட்சிப் பிரமுகர் கடத்தற் குற்றச்சாட்டில் கைது

வெளிநாட்டிலிருந்து பிடவைகளைக் கடத்தி வந்த குற்றச்சாட்டின் பேரில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பிரமுகரான புத்ததாச என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கடுவெல பிரதேச சபையின் பிரதித் தலைவராவார்.

இரண்டுகோடி 15 இலட்சம் ரூபா பெறுமதியான 26,850 யார் கடத்தற் பிடவைகள் நேற்று முன்தினம் வத்தர முல்லையில் வைத்துக் கைப்பற்றப்பட்டிருந்தது. இக் கடத்தல் தொடர்பாகவே சுதந்திரக்கட்சிப் பிரமுகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிடவைகளைக் கடத்தி வந்த 3 லொறிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

# பாரசீக வளைகுடாப் பகுதிக்கு

# அமெரிக்கப் போர்க் கப்பல்கள்!

ஈராக்கிற்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் அமெரிக்காவின் விமானம் தாங்கிக் கப்பலொன்றும் அதற்குக் காவலாகப் போர்க் கப்பல்களும் பாரசீக வளைகுடாப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை ஈராக் அழிக்க வேண்டுமென்ற ஐ. நா. தீர்மானத்திற்கு ஈராக் அதிபர் சதாம் ஹுசெய்ன் கட்டாயம் அடிபணிந்தே ஆகவேண்டுமென்பதற்கு விடுவிக்கப்படும் எச்சரிக்கையே இது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஐ. நா. தீர்மானத்தைச் செயற்படுத்த ஈராக் தவறிவிட்டதென ஐ. நா. சபை குற்றஞ்சாட்டிய மறுநாளே அமெரிக்கா இவ்வாறு செயற்படத் தொடங்கிவிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க நீதிமன்றங்களுக்கு விசேட அதிகாரங்கள்!

வெளிநாடுகளில் சித்திரவதை அல்லது மரணதண்டனை போன்றவற்றில் சம்பந்தப்பட்ட வெளிநாட்டவர்களுக்கு எதிராக இழப்பீடுகளைப் பெறுவதற்கு அமெரிக்க நீதிமன்றங்களுக்கு அதிகாரமளிக்கும் சட்டமூலமொன்று ஜனாதிபதி புஷ்ஷினால் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அமெரிக்கர்கள் மீது குற்றம் புரிந்த வெளிநாடுகளிலுள்ளோர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களை நாடு கடத்தும் உரிமையை அமெரிக்கா ஏற்கனவே அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களின் குடும்பங்கள் அமெரிக்க நீதிமன்றங்களில் இழப்பீட்டைப் பெற புதிய சட்டமூலம் அதிகாரமளிக்கிறது.

சித்திரவதை அல்லது மரணம் நடந்த நாட்டிலுள்ள நீதிமன்றில் நஷ்டஈட்டைப் பெற எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியுற்றால் அமெரிக்க நீதிமன்றங்களில் இழப்பீட்டுக்கான வழக்கைத் தாக்கல் செய்ய முடியும்.

## ஆதரவாக வாக்களிக்க வெள்ளையரிடம் கோரிக்கை

நாளை மறுதினம் நடைபெறவுள்ள கருத்துக்கணிப்பில், ஜனநாயகத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு தென்னாபிரிக்க வெள்ளையர்களை ஏழு ஆபிரிக்க முன்னரங்க நாடுகள் கேட்டுள்ளன.

எதிராக வாக்களித்தால் அது தென்னாபிரிக்காவை இனப் பாகுபாட்டு நிலைமைக்குத் தள்ளிவிடும் எனவும் இந்த நாடுகள் அறிவுறுத்தியுள்ளன.

## நாணயக் கட்டுப்பாடு நீக்கம்: வெளிநாட்டு கல்விக்கு ஊக்குவிப்பு

நாணயக் கட்டுப்பாட்டு விதிகளை மத்தியவங்கி தளர்த்தியுள்ளதன் விளைவாக வெளிநாட்டில் கல்வி கற்பதற்கான வசதி அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இதன்மூலம் வெளிநாடுகளில் ஆரம்ப, கனிஷ்ட, மற்றும் உயர்கல்வி கற்க இனிமேல் தடங்கல்கள் இராது எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இப் புதிய நடைமுறையினால் இலங்கைக் குழந்தையொன்று வெளிநாடொன்றில் ஆரம்பக் கல்வியைத் தொடர்வதற்குக்கூட இனிமேல் ஊக்குவிப்புக் கிடைக்குமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்மூலம் சுதந்திரத்திற்குப்பின்னர் வெளிநாட்டுக் கல்விக்கு அதிகளவான வாய்ப்புத் தற்பொழுது வழங்கப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

## தோட்டத் தொழிலாளாகளுக்கு மாதச் சம்பளம் வழங்க முயற்சி!

அரசாங்கத் துறையைச் சேர்ந்த பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களுக்கு மாதச்சம்பளத் திட்டமொன்றை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

வருடமொன்றுக்கு 300 நாள்கள் (அதாவது மாதம் 25 நாள்கள்) என்ற அடிப்படையில் தொழிலாளர்களுக்கான மாதச்சம்பளம் கணிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மாணவருக்கு மின் வெளிச்சம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தென்மராட்சிப் பிரிவினரால் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு நேற்று முன்தினம் முதல் இரவு வேளையில் மின் ஒளி வழங்கப்பட்டு வருகின்றது.

மாணவர்கள் இரவுவேளையில் கல்வி கற்பதற்கு இவ்வசதியை பயன்படுத்திக்கொள்ள முடியும்.

செஞ்சிலுவைச் சங்கத்தினால் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய ஜெனரேட்டர் ஒன்று இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

## 'லக்ஸ்பிறே' விலைக்குறைப்பு

லக்ஸ்பிறே பால்மாவின் விலை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

லங்கா மில்க் பூட்ஸ் நிறுவனம் மக்கள் மயப்படுத்தப்படுவதையடுத்தே இந்த வாய்ப்பு பாவனையாளர்களுக்கு கிடைப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கருத்தரங்கு

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெறும்வாராந்தக் கருத்தரங்கு இன்று காலை 10 மணிக்கு கோண்டாவிலுள்ள கலை, பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இவ்வார அமர்வில் திரு. எ. வி. மாணிக்கம் அவர்கள் 'எனது பத்திரிகைத் துறை அனுபவம்' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார்.

## ஆயுர்வேதத்தால் நீண்ட ஆயுள்; அமெரிக்கர்களும் அதில் ஆர்வம்!

அமெரிக்காவில் ஆயுர்வேத 'மருத்துவம் ஆங்கில மருத்துவத்தைவிட தற்போது வளர்ச்சியுற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

'தீபக் சோப்ரா' என்ற இந்திய மருத்துவர் மகரிஷ் 'ஹெல்த் சென்றர்' என்ற பெயரில் ஆயுர்வேத வைத்தியசாலையை ஆரம்பித்துள்ளார். இதன் 13 கிளைகள் அமெரிக்காவின் சகல இடங்களிலும் பரந்து உள்ளதாகவும் இவரால் வெளியிடப்பட்ட ஆயுர்வேதம் தொடர்பான புத்தகத்துக்கு போதிய கிராக்கி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆயுர்வேத மருத்துவத்தினால் நீண்ட ஆயுள் உருவாகும் என்ற நம்பிக்கையும், ஆங்கில மருந்துக் குளிசைகளைப் பாவிப்பது உடம்புக்கு கெடுதல் ஏற்படும் என்ற எண்ணமும் தற்போது அமெரிக்காவில் பரவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (15)

## விசாரணை முடியும் வரை அரைமாதச் சம்பளம் கிடைக்கும்

குற்றச்சாட்டொன்றின் மீது வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்படும் அரச ஊழியர் ஒருவர் தொடர்பான விசாரணை 6 மாதத்துக்கு மேலாக நீடிக்கும் பட்சத்தில், குறித்த அவ் ஊழியருக்கு அரை மாதச் சம்பளத்தை விசாரணை முடியும் வரை தற்காலிக கொடுப்பனவாக வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது பற்றிய பணிப்புரைகளைக் கொண்ட சுற்று நிருபம் பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபை அமைச்சினால் தற்பொழுது வெளியிடப்பட்டுள்ளது.

## 2, 95,4, 905 போத்தல் பதநீர் கடந்த வருடம் உற்பத்தி

தமிழீழப் பிரதேசத்தில் அமைந்துள்ள தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த வருடத்தில் 2 954. 905 போத்தல் பதனீரை உற்பத்தி செய்துள்ளன.

அத்துடன் 97 386 கிலோ வெல்லமும் 15 906 கிலோ பனஞ் சீனியும் 5,648 கிலோ பனாட்டும் 163, 334 போத்தல் பனம் பாணியும் கடந்த வருடம் தெங்கு பனம்பொருள் விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ ஆய்வுநிறுவன கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

## இரணைமடுக் குளத்தில் நன்னீர் மீன்பிடித்தல் மேற்கொள்ளமுயற்சி

தற்போதைய சூழ்நிலையில் கடற்தொழில் பாதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக நன்னீர்மீன்பிடிப்பைநடைமுறைப்படுத்துவதற்கு முதற்கட்டமாக, இரணைமடுக் குளத்தில் நன்னீர் மீன் பிடிப்பை மேற்கொள்வதற்கான ஆரம்ப முயற்சிகளில் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

பிடிக்கப்படும் மீன்களைப் பதப்படுத்தி விற்பனை செய்வதற்கும் கோழித்தீன் தயாரிப்பில் பயன்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

மீனிற்கானசந்தைவாய்ப்புக்களை அறிவதற்காக மீன் விற்பனை தொடர்பான சந்தைத் தரவுகள் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன.

## ஊனமுற்ற மாணவர்க்கு விசேடவைத்திய பரிசோதனை

யாழ் மாவட்டத்திலுள்ள ஊனமுற்ற மாணவர்கள் யாழ் போதனாவைத்தியசாலையின் விசேட பிரிவில் பரிசோதிக்கப்படுவர் என யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

பிரதி செவ்வாய் வியாழக் கிழமைகளில் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை இவர்கள் பரிசோதிக்கப்படவுள்ளனர்.

கண்பார்வைக் குறைவு, ஊனமுற்றதற்கான காரணங்கள் என்பவை தொடர்பாக ஆராய்வதற்கும் இவர்களைப் பரிசோதிப்பதற்கு உதவி செய்யும் பொருட்டும் இவ்வாறு ஊனமுற்ற பாடசாலை மாணவர் பற்றிய விவரங்களை தமக்கு அனுப்பி வைக்குமாறு அவர் யாழ் பிரதேசப் பணிப்பாளரைக் கோரியுள்ளார். 15

## இன்று ஊரெழுவில்

ஊரெழு சீ. சீ. த. க பாடசாலை கலவிச் சமூகாய இல்லத் தடகள விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் 1 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் இ. குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இன்றைய போட்டிகளுக்கு யாழ் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார்.

# உலகக்கிண்ண கிரிக்கெட் அவுஸ்திரேலிய அணி வெற்றி

ஐந்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் அவுஸ்திரேலியாவில் நேற்று நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலிய அணி அதனை எதிர்த்து ஆடிய சிம்பாவே அணியை 132 ஓட்டங்களால் வெகு இலகுவாக வெற்றியீட்டியது

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 46 ஓவர்களில் ஆறு விக்கற்றுகளை மாத்திரம் இழந்து 262 ஓட்டங்களைக் குவித்தது.

அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி எதிர்பாராத விதத்தில் சகல விக்கற்றுகளையும் துரித கெதியில் பறிகொடுத்து 130 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதினால் தோல்வியைத் தழுவிக்கொண்டது. (16)

# யாழ். மாநகரப்பகுதியில் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

யாழ். மாநகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து போடுதல் தொடர்பான நடவடிக்கை நாளை 16 ஆம்திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன,

எந்தெந்த இடங்களில் எவ்வெப்போது என்பது பற்றிய விவரங்களை சுகாதாரப் பரிசோதகர்களிடமோ, சனசமூக நிலையங்களுக்குப் பொறுப்பானவர்களிடமோ, அல்லது யாழ் மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலோ விசாரித்து அறிந்து கொள்ளலாம்.

முக்கியமாக யாழ். மாநகராட்சி மன்றத்தில் 1992ஆம் ஆண்டுக்குரிய உத்தரவுப் பத்திரம் பெற்ற நாய்களுக்கு மாத்திரம் தடுப்பூசி மருந்து ஏற்றப்படும். அத்துடன் தடுப்பூசி மருந்து ஏற்றும் இடத்திலேயே உத்தரவுப் பத்திரமும் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளன

இந்நடவடிக்கைக்கு சகல பொது ஸ்தாபனங்களின் ஒத்துழைப்பையும் வேண்டுகின்றோம் என மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

# பிரிட்டனில் அகதிகளை கட்டுப்படுத்த சட்டம்

பிரிட்டனில் தஞ்சம் புகும் அகதிகளின் எண்ணிக்கைக்கு கட்டுப்பாடு விதிக்கும் சட்டவாக்க மசோதா ஒன்று பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் மீண்டும் சமர்ப்பிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஏப்ரல் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் காரணமாக தற்போதைய நாடாளுமன்றம் கலைக்கப்படவிருக்கிறது. இதற்கு முன்னதாகவே இம் மசோதாவை எதிர்க்கட்சியான தொழிற் கட்சியினரின் ஆதரவுடன் சட்டமாக்க ஆளுங்கட்சியான கன்சர்வேடிவ் கட்சி எண்ணியிருந்தது ஆனால் பல மசோதாக்கள் நிறைவேற்றப்பட விருப்பதால் இம் மசோதாவைச் சட்டமாக்க முடியவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

எனினும் கன்சர் வேடிவ் கட்சிமீண்டும்பதவிக்குவந்தால் இம் மசோதா சட்டமாக்கப்படும் என அக்கட்சியினர் அறிவித்துள்ளனர்.

## நெல்சன் மண்டேலா எச்சரிக்கை

# வெள்ளையர் அரசுக்கு பதிலடி கொடுக்கப்படும்

தென்னாபிரிக்கத் தலைநகரான ஜொகன்ஸ்பேர்க்கில் இடம் பெற்ற மோதல் ஒன்றின் போது 18 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியினருக்கும் சூலூ இன்காட்டா கட்சியினருக்குமிடையே ஏற்பட்ட மோதலிலேயே இம் மரணங்கள் சம்பவித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது

வெள்ளையரிடையே நடத்தப்படும் கருத்துக்கணிப்பில் வலதுசாரிகள் வெற்றிபெற்றால் உள்நாட்டுக் குழப்பம் வரும் எனத் தெரிவித்த ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் நெல்சன் மண்டேலா, தென்னாபிரிக்க அரசு பக்கச்சார்புடைய வழியை மேற்கொள்ளுமானால் தக்கபதிலடி கொடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்

# தமிழ் பாடசாலைகள் மூடப்பட்டன

இரத்தினபுரி கோட்டக் கல்வியலுவலகத்திற்குட்பட்ட அலுபொல தமிழ் வித்தியாலயம், மரததோட்டம் தமிழ் வித்தியாலயம், வெல்லவ மூகலான தமிழ் வித்தியாலயம் ஆகிய மூன்றும் மூடப்பட்டுள்ளன.

கட்டிட வசதியின்மை, தளபாட வசதியின்மை ஆசிரியர் பற்றாக்குறை ஆகிய காரணங்களாலேயே இவை மூடப்பட்டுள்ளன.


வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்க

## அறிவித்தல்

16-03-92 திங்கட்கிழமை நடைபெறவிருந்த ஓராண்டு நிறைவு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்றும் இவ்விழா நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் சகல உற்பத்தியாளருக்கும். தொழிலாளருக்கும் ஏனைய அனைத்து மக்களுக்கும் அறியத் தருகின்றோம்.

நன்றி

செயலாளர்
இரா. சுந்தரலிங்கம்

03030


# யாழ். பெரியாஸ்பத்திரியில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

யாழ் பொதுமருத்துவமனையில் பலதரப்பட்ட மருந்துக் குளிகைகளுக்கும் கடந்த பல மாதங்களாக தட்டுப்பாடு நிலவி வருகிறது முக்கியமாக நுண்கிருமிக்கொல்லி மருந்துக் குளிகைகளான அன்ரிபயற்றிக்ஸ அம்பிசிலின், ரெற்றாசைகிலின், குளக்ஸசெலின், எருத்திரமைசின், றெரமறாமைசின், பிளைஜில், பக்ரிம், ஆகியன பென்சிலின் அரசினால் போதியளவானதாக அனுப்பப்படுவதில்லை என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்குளிகைகள்யாவும் விடுதிகளில் தங்கியிருக்கும் நோயாளர்களுக்கும் கிளினிக் நோயாளிகளுக்குமட்டுமேவழங்கப்படுகின்றன

இதனால் வெளிநோயாளர்கள் தனியார் கடைகளில்வாங்குகின்றனர்.

இதேவேளை மிகவும் கூடிய விலையில் இக்குளிகைகள் தனியார் கடைகளில் விற்பனை செய்யப்பட்டுவருகின்றன.

குழந்தைகளுக்கான பிறிற்றோன்சிறப், பனடோல்சிறப், பெனாடில்சிறப், அம்பசிலின் சிறப் பாணி மருந்துகளும் அண்மைக்காலமாக இங்கு இல்லை.

ஆஸ்பிறின், பிறிற்றோன், விட்டமின்சி, போன்ற குளிகை வகைகளுக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது 07

# இன்று பயிற்சி வகுப்பு

பருத்தித்துறை பிரதேச சபைப் பகுதியில் உள்ள தேநீர்ச்சாலைகள், உணவு விற்பனை நிலையங்கள் பேக்கரிகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான உணவுப் பொருள்கள் விநியோகமும் சுகாதாரமும் பற்றிய பயிற்சி வகுப்பொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை புலோலிமெதடிஸ் மிஷன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. 11

# சுயமுயற்சி வேலைத்திட்டம்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 16 கிராமிய உற்பத்திக் குழுக்கள் நெல் மற்றும் சிறுதானிய செய்கையை சுயமுயற்சி வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொண்டு தற்போது அறுவடையில் ஈடுபட்டு வருகின்றன

இவ்வேலைத் திட்டம் கிராமத்திலுள்ள மக்களின் கூட்டு முயற்சியால் நடைமுறைப் படுத்தப்பட்டது,

மேலும் கிராம மட்டத்தில் புதிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இத்திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் வருமானம் பயன்படுத்தப்படவுள்ளது என தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது

# அடையாள வேலை நிறுத்தம்

தோட்டத்தொழிலாளருக்கு சம்பள உயர்வு வழங்கப்படாமை தோட்டங்களை தனியார் மயப்படுத்தல் போன்றவற்றை அரசு தொழிற் சங்கங்களுடன் கலந்து பேசவில்லை என்று கண்டித்து ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்ய தோட்டத் தொழிற் சங்க கூட்டுக்கமிட்டி தீர்மானித்துள்ளது

## தமிழீழம்...

அப்போது அவர்களுக்குப் பதிலளித்த திருநாவுக்கரசு தமிழ் ஈழத்தைக் கோரும் புலிகள் இயக்கத்துக்கு எம் ஜி ஆர் நான்குகோடி ரூபா கொடுத்ததை நினைவூட்டினார்

எம் ஜி ஆர் தமிழ்உணர்வால் அப்பணத்தைக் கொடுத்தாரே தவிர ராஜீவ் காந்தியைக் கொலைசெய்வதற்கு அல்ல என்று சட்ட அமைச்சர் கே, ஏ. கிருஷ்ணசாமி குறுக்கிட்டுச் சொன்னதாக ஏஜென்சி செய்தி தெரிவித்தது

# வங்கிகளில் கடன்பெற்றோர் மீது வழக்குத்தாக்கல்- அமைச்சர் ரணில்

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியனவற்றில் கடன் பெற்றுத்தராதவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர்ரணில் விக்கிரமசிங்க செய்தியாளரிடம் கூறினார்.

தற்போது 15ஆயிரம் கடன் மீட்பு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகக் கூறிய அவர் உலக வங்கியின் நெருக்குதலாலேயே இரு வங்கிகளை மீளமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் சொன்னார். 06

# செஞ்சிலுவைச்சங்க செயற்குழுக் கூட்டம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் செயற்குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றபோது காரசார விவாதம் இடம்பெற்றது.

செஞ்சிலுவைச்சங்கத்தின் கடந்த கால செயற்பாடுகள் குறித்து பல உறுப்பினர்கள் விவாதித்தனர்.

காலை 10 மணிமுதல் மாலை 4 மணிவரை இக்கூட்டம் நடைபெற்றது.

# இரு அமைச்சர்கள் மீது ராமராவ் குற்றச்சாட்டு

ஜனாதிபதி உரை மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மான வாக்கெடுப்பின் போது தெலுங்குதேசக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளாமைக்கு மத்திய அரசின் இரு அமைச்சர்களே காரணம் என்று கட்சித் தலைவர் என். டீ. ராமராவ் தெரிவித்துள்ளார்.

கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் நிமித்தம் பி. உபேந்திரா உட்பட ஆறு எம். பி. கள் தமது கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்

இதேவேளை இக்கட்சியிலிருந்து பிரிந்துசென்ற குழுவின் தலைவர் விஜயகுமார்ராஜு ராமராவின் தன்னிச்சையான அதிகாரப்போக்கே இப்பிளவிற்குக் காரணம் எனவும் மத்திய அரசை கவிழ்க்க முயற்சிப்பது நாட்டு நலனுக்கு கேடுவிளைவிக்கும் எனவும் குறிப்பிட்டார்,

## தமிழ் சுருக்கெழுத்தாளர்

# பொலிஸ் தடுத் வைப்பு நீதிமன்றில் வழக்குதாக்கு

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆள் கொணர்வு வழக்கில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் சட்டமா அதிபருக்கும் நீதிமன்றத்தினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது,

இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ள திருமதி தியாகராஜா தனது மகள் செல்வி அமிர்தம் தியாகராஜா இந்து சமய கலாசார அமைச்சில் சுருக்கெழுத்தாளராகக் கடமையாற்றியதாகவும் சென்ற வருடம் நவம்பர் 2 ஆம் திகதி பம்பலப்பிட்டிப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு இதுவரை விடுவிக்கப்படவில்லையெனக் குறிப்பிட்டுள்ளார் பம்பலப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில்செல்வி அமிர்தம்மட்டுமே ஒரேயொரு பெண் கைதி யென மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வழக்கை விசாரித்த நிதிமன்றம் சட்டமா அதிபருக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் அழைப்பாணை விடுத்தது.

# கம்யூனிச வீழ்ச்சியில் பாப்பரசரின் பங்கு

கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிசம் வீழ்ச்சி அடைவதற்கு பாப்பரசரின் பங்களிப்பு மிகவும் முக்கியமாயிருந்தது என முன்னாள் சோவியத் ஜனாதிபதி குறிப்பிட்டார்

கடந்த சில ஆண்டுகளாக கிழக்கு ஐரோப்பாவில் நிகழ்ந்துள்ள சம்பவங்கள் பாப்பரசர் இல்லையெனில் நிகழ்ந்திருக்க மாட்டாதென மேலும் தெரிவித்தார்

# ஆங்கிலத்தில் இராமாயணம்

கம்ப இராமாயணம் ஆங்கில மொழியில்மொழிபெயர்ப்பதற்கான திட்டமொன்று பரிசீலனையில் இருப்பதாக தமிழக பட்ஜட் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்)லிமிற்றெட் நிருவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில்
15-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது